### அதிநவீன பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சை:

# திராவக வீச்சில் முகம் சிதைந்த ஆப்பிரிக்க அரசியல் தலைவர் குணம் அடைந்தார்

## சென்னை மியாட் மருத்துவமனை சாதனை

சென்னை, ஜூலை.7– திராவக வீச்சில் முகம் சிதைந்த ஆப்பிரிக்க நாட்டு அரசியல் தலைவர், சென்னை மியாட் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட அதிநவீன பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சையால் குணம் அடைந்தார்.

### திராவக வீச்சு தாக்குதல்

கிழக்கு ஆப்பிரிக்க நாடான ஜான்சிபாரில் அரசியல் எதிரிகள் மீது திராவக வீசி தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அடிக்கடி நடப்பது உண்டு. அந்த வகையில், அந்த நாட்டை சேர்ந்த முகமது ஓமர் சேட் (வயது 59) என்ற அரசியல் தலைவர் மீது கடந்த மே மாதம் 22–ந்தேதி அடையாளம் தெரியாத மர்ம நபர் ஒருவர், திராவகத்தை வீசிவிட்டு தப்பியோடிவிட்டார்.

திராவக வீச்சில் ஓமரின் தலை, முகம், கழுத்து, மார்பு பகுதிகள் சிதைந்து முகம் அலங்கோலமானது. வலியாலும், ஆசிட் எரிச்சலாலும் துடிதுடித்த அவர், அருகே இருந்த காவல் நிலையத்திற்கு ஓடினார். போலீசார் அவர் உடல் மீது தண்ணீரை ஊற்றினார்கள். பின்னர் உடனடியாக ஓமர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். தனியார் மருத்துவமனை ஒன்றில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

### மியாட் மருத்துவமனையில் சிகிச்சை

டாக்டர்கள் 3 மாதங்கள் தீவிர சிகிச்சை அளித்தும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதோடு, புண்ணான பகுதிகளில் மேலும் தொற்று உண்டானது. இதற்கிடையே, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல அவருக்கு மலேரியா காய்ச்சலும் ஏற்பட்டது.

இந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் 21–ந்தேதி மேல் சிகிச்சைக்காக ஓமர் விமானம் மூலம் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார். இதற்கிடையே காய்ச்சல் அதிகமாகி புண்ணில் உள்ள திசுக்கள் அழுக ஆரம்பித்தன. இதைத்தொடர்ந்து, ஓமருக்கு மயக்க மருந்து கொடுத்து அவரின் புண்ணான பகுதி இறந்த திசுக்களை டாக்டர்கள் அப்புறப்படுத்தினார்கள். அதன்பிறகு அதிநவீன பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சை அளிக்க முடிவு செய்தனர்.

### கண்ணீர் மல்க நன்றி

மியாட் மருத்துவமனையில் உள்ள ஜெர்மனி நாட்டின் அதிநவீன மருத்துவ கருவிகள் கொண்ட ஆபரேஷன் தியேட்டரில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத்துறை தலைவர் டாக்டர் எபன் கோஷி தலைமையில் டாக்டர்கள் சிகிச்சை செய்தனர். அவரது தொடை பகுதி தோல் எடுக்கப்பட்டு ஆசிட் வீச்சில் காயமடைந்த பகுதிகளில் பொருத்தப்பட்டது.

குறிப்பிட்ட பகுதியில் தோல் சரியாக பொருந்தி இயல்பான தோற்றத்தை கொடுத்தது. இதற்கிடையே, மலேரியா காய்ச்சலும் குணம் அடைந்தது. தனக்கு சிகிச்சை அளித்த மியாட் மருத்துவமனை டாக்டர்களுக்கும், மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாசுக்கும் ஓமர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். கூடுதல் சிகிச்சை மூலம் பூரணமாக குணம் அடைந்த அவர், இன்று (ஞாயிற்றுக்கிழமை) தாய்நாடு திரும்புகிறார்.




திராவக வீச்சில் சிதைந்த முகத்துடன் சென்னை மியாட் மருத்துவமனைக்கு வந்து அதிநவீன சிகிச்சை மூலம் குணம் அடைந்த ஆப்பிரிக்க நாட்டு அரசியல் தலைவர் முகமது ஓமர் சேட், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ் மற்றும் டாக்டர்களுக்கு நன்றி தெரிவித்தபோது எடுத்த படம்.